SC. No. 258 /2022

Dated: 04.02.2025

PW 6– நூர்தம்மா, க/பெ. சித்தலிங்கப்பா

1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) இறந்துபோன மாதப்பா என்னுடைய அப்பா. கண்ணிகாபுரத்தில் தெற்கு புறத்தில் சுமார் 4 கி.மீ தொலைவில் மேல்கவுணி கிராமம் இருக்கிறது. சம்பவம் நடக்கும்போது எனக்கு மொத்தம் 2 குழந்தைகள். அந்த சமயத்தில் பெரியவனுக்கு 5 வருடங்கள் . சின்னவனுக்கு 1 வருடம் ஆகியிருந்தது. என் கணவர் விவசாய கூலி செய்து வந்தார் . அந்த வீட்டில் நான் என் கணவர் மற்றும் 2 பிள்ளைகள் தான் இருந்தோம் என்று சொன்னால் அது சரிதான் . என் கணவர் சித்தலிங்கப்பா வேலைக்கு போய்விட்டு 4–5 மணிக்கு வருவார். என் அப்பா மாதப்பாவை சம்பவம் ஒரு நாள் கழித்து மதியம் 2.00 மணிக்கு தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் . என் அப்பாவை நேரடியகாக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன் என்று சொன்னால் அது சரிதான் . இறந்து போனவர் என் அப்பா என்பதாலும், என் உறவினர்கள் சொல்லி கொடுத்தும் , போலிசார் சொல்லி கொடுத்தும், எதிரிகள் மீதும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

2) இதற்கு முன் விசாரித்தபோது என் தங்கையை முடியை பிடித்து இழுத்து வந்து முத்து தொண்ணையால் அடித்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேனா என்று சொன்னால் நான் சொல்லியுள்ளேன். என் அண்ணனை சிவா கட்டையால் அடித்தார் . என்னை போலிசார் விசாரித்தபோது நான் சொல்லியிருக்கிறேன். அதேபோல்

போலிஸ் விசாரணையின்போது கவுரம்மாள், பசுவராணி, மாதையன் , பசுவராஜ் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டதை என்ற விவரத்தை போலிசாரர் விசாரணையின் போது நான் சொல்லியிருக்கிறேன் . என் அப்பாவை யார் அடித்து காயம் படுத்தினார்கள் என்ற விவரம் தெரியாது என்றும் , சந்தேகத்தின் பேரிலும், முன் விரோதம் காரணமாகவும் எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு . எதிரிகளுக்கும், என் அப்பா அடிப்பட்டு இறந்ததற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது தவறு . பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

**மறுவிசாரணை– இல்லை.**

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN